கூட்டணி ஆட்சியா? ஒரு கட்சி ஆட்சியா? மக்கள் முடிவு செய்வார்கள்

மாணிக்கம் தாகூர் எம்.பி. கருத்து

சென்னை, பிப்.11–

கூட்டணி ஆட்சியா? ஒரு கட்சி ஆட்சியா? என்பதை மக்கள் முடிவு செய்வார்கள் என்று முதலமைச்சர் ஸ்டாலினுக்கு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் பதில் அளித்துள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் இன்று 'இந்தியா–டுடே' சார்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அப்போது கூட்டணி ஆட்சி பற்றி கேட்ட கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில் கூட்டணி ஆட்சி என்பது தமிழகத்துக்கு ஒத்துவராது என்று திட்டவட்டமாக கூறிவிட்டார்.

ஆட்சியில் பங்கு வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியில் சிலர் வலுவாக கோரிக்கை வைத்தனர். காங்கிரஸ் மேலிடத்தில் இந்த கோரிக்கையையும் வலியுறுத்தி வந்தார்கள்.

காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த போதெல்லாம் இந்த கோரிக்கையை வெளிப்படையாகவே அழுத்தமாக கூறி வந்தார். இந்த நிலையில் இன்று முதலமைச்சர் ஸ்டாலின் ஆட்சியில் பங்கு இல்லை என்று அறிவித்துள்ள நிலையில் இது காங்கிரசார் மத்ியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தஇயலுடுத்துகூட்டணிஆட்சியா? அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை மக்கள் முடிவு செய்வார்கள் என காங்கிரஸ் எம்.பி.மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது: மக்கள் முடிவு செய்வார்கள். கூட்டணி ஆட்சியா? அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை 2006ல் மக்கள் தீர்ப்பை செயல்படுத்தாதது நம் தமிழ்நாடு காங்கிரசின் தவறு என தெரிவித்துள்ளார்.

அரசு நிகழ்ச்சிகள், பள்ளிகளில் 'வந்தே மாதரம்' பாடல் முழுமையாக பாட வேண்டும்

மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு

புதுடெல்லி, பிப்.11–

நாட்டில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகள் மற்றும் பள்ளிகளில் 'வந்தே மாதரம்' முழு பாடலையும் கட்டாயம் பாட வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் கடந்த டிசம்பரில் நடைபெற்ற குளிர்கால கூட்டத்தொடரின் போது, வந்தே மாதரம் பாடல் 150 ஆண்டுகளை நிறைவு செய்தது கொண்டாடும் வகையில் விவாதம் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் வந்தே மாதரம் பாடல் இசைப்பதற்கு புதிய விதிமுறைகளை மத்திய உள்துறை அமைச்சகம் வகுத்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

★ அரசு நிகழ்ச்சிகள் மற்றும் பள்ளிகளில் தேசிய கீதத்திற்கு முன்னதாக 'வந்தே மாதரம்' பாடலையும் கட்டாயம் பாட வேண்டும்.

★ வந்தே மாதரம் பாடலின் 6 பத்திகளையும் (முழு பாடல்) கட்டாயம் பாட அல்லது ஒலிக்கப்பட வேண்டும். பாடல் இசைக்கப்படும் நேரம் தோராயமாக 3 நிமிடங்கள் 10 வினாடிகள் ஆகும்.

★ தேசிய பாடலான வந்தே மாதரம் பாடல் இசைக்கப்படும் போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.

★ ஜனாதிபதி, கவர்னர் உள்ளிட்டோர் பங்கேற்கும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும், முடிவிலும் வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட வேண்டும்.

★ ஆகாஷ்வாணி (அகில இந்திய வானொலி) மற்றும் தூர்தர்ஷன் போன்ற அரசு ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் ஜனாதிபதி உரைக்கு, முதலிலும், கடைசியிலும் வந்தே மாதரம் இசைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பொது அறிவிப்பு

இதனால், பொதுமக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் மாறில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆணையம், தமிழ்நாடு கழகம் எண். EC25C3801TN5117487N தேதி : 06.01.2026 வாயிலாக ஓசியன் லைப்ஸ்பேஸஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Ocean Lifespaces India Private Limited) அவர்களுக்கு சர்வே எண்.386/2A-1, மேட்வாக்கம் கிராமம், தாம்பரம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாட்டில் அமையவுள்ள 33,057.40 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட முன்மொழியப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் : "ஓசியன் க்ரஸ்ட்" அமைக்க சுற்றுச்சூழல் இசைவுச்சான்று வழங்கியுள்ளது. அனுமதி ஆவணங்களின் நகல்கள் மாறில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆணையத்தில் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்திலும் உள்ளன.

ஓசியன் லைப்ஸ்பேஸஸ்
இந்தியா பிரைவேட் லிமிடெட்
எண். 1, தொழிற்பேட்டை, CIPET ஹாஸ்டல் சாலை,
கிண்டி, சென்னை - 600 032.

தூத்துக்குடியில் தாமிர உற்பத்தி தொழிற்சாலை அமைக்க அனுமதி கோரி வேதாந்தா வழக்கு: தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, பிப். 11–

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில், பசுமை தாமிர உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க அனுமதி மறுத்த உத்தரவை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்கும்படி, தமிழக அரசுக்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கும் சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்த போராட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, நீர், நிலம், காற்று மாசு ஏற்படுத்துவதாகக் கூறி, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூட, 2018 ம் ஆண்டு தமிழக அரசு உத்தரவிட்டது. இந்த உத்தரவை சென்னை ஐகோர்ட்டும், சுப்ரீம் கோர்ட்டும் உறுதி செய்துள்ளன. இந்நிலையில், ஸ்டெர்லைட் ஆலையில், பசுமைத் தாமிர உற்பத்தி தொழிற்சாலை அமைக்க அனுமதி கோரி, தமிழக அரசுக்கு வேதாந்தா நிறுவனம், கடந்த ஜனவரி 9 ம் தேதி விண்ணப்பித்திருந்தது. பசுமை தாமிரம் குறித்த பல்வேறு ஆய்வு அறிக்கைகளை இணைத்து அளிக்கப்பட்ட இந்த விண்ணப்பத்தை நிராகரித்து, கடந்த ஜனவரி 27 ம் தேதி அரசு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை ரத்து செய்து, நிதிமன்ற கண்காணிப்பில் தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம், மத்திய சுற்றுச்சூழல் துறை, மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம், மத்திய சுரங்கத் துறை அதிகாரிகள், நிபுணர்கள் அடங்கிய பன்னோக்கு நிபுணர் குழுவை அமைத்து, பசுமைத் தாமிரம் உற்பத்தி ஆலை அமைப்பது குறித்து விரிவாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்க உத்தரவிடக் கோரி, வேதாந்தா நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், ஏற்கனவே மூடப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை புதுப்பிக்கும் வகையில் இத்திட்டத்தை முன்வைத்துள்ளனர். இதுசம்பந்தமாக அரசின் கருத்தை அறிந்து தான் பதிலளிக்க முடியும் என கூடுதல் தலைமை வழக்கறிஞர் தெரிவித்தார். இதையடுத்து, வேதாந்தா மனுவுக்கு பதில்மனு தாக்கல் செய்யும்படி, தமிழக அரசுக்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கும் உத்தரவிட்ட நீதிபதிகள், பசுமை தாமிர ஆலை அமைப்பது தொடர்பாக மத்திய சுற்றுச்சூழல் துறை, கனிமவளத்துறை மற்றும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரிய நிபுணர்கள் குழுவை அமைப்பது குறித்தும் விளக்கமளிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளனர். இந்த வழக்கில் விசாரணையை பிப்ரவரி 26ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்துள்ளனர்.

ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : மிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இணையம்: investorrelations@esab.co.in

டிசம்பர் 31 , 2025 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(மீ.மீ. கட்டணங்களில் (₹₹ தவிர)

வ. எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு டிசம்பர் 31 , 2025 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30 , 2025 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு டிசம்பர் 31 , 2024 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஒன்பது மாதங்கள் டிசம்பர் 31 , 2025 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஒன்பது மாதங்கள் டிசம்பர் 31 , 2024 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31 , 2025 (தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம்	37,990	38,389	34,075	111,669	101,148	138,125
2	இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	7,183	7,012	5,452	19,705	17,319	23,572
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	5,818	10,103	5,452	21,431	17,319	23,572
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	4,300	7,920	4,038	16,314	12,799	17,542
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	4,278	7,915	4,038	16,283	12,799	17,524
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539	1,539	1,539
7	மற்ற மூலதனம்	-	-	-	-	-	34,586
8	பங்கு விலித நடுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)						
	அ) அடிப்படை	27.94	51.46	26.24	106.01	83.16	113.98
	ஆ) துலைமதிப்பு	27.94	51.46	26.24	106.01	83.16	113.98

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **டிசம்பர் 31 , 2025**-ன் முடிவடைந்த காலாண்டு மற்றும் **ஒன்பது** மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும்.காலாண்டு மற்றும் **ஒன்பது** மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் கம்பெனியின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும். பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

சென்னை
10, பிப்ரவரி 2025

"Shaping the world we imagine"
Visit our website : https://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹந்த் கம்பிர்
மேலாண்மை இயக்குனர்

ஊராக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

அறிவிப்பு எண்:1223/2025/அ1 நாள்:10/02/2026

திருவள்ளூர் மாவட்டம், புழல் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பின் கீழ் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தினை நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 11/02/2026 முதல் 16/02/2026 வரை நேரடியாக / அஞ்சல் வழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்.	பொருள்	அலுவலக உதவியாளர்
1.	ஊதியம்	ரூ.15700-58100 (Level-1)
2.	01.07.2025 அன்று அதிகபட்ச வயது வரம்பு இனம் வயது வரம்பு	SC - 18-37
3.	மொத்த பணியிடங்கள்	1
4.	இன சுழற்சி விவரங்கள்	SC(G)
5.	கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள்	• 8 ஆம் வகுப்பு தேர்ச்சி • மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும்
6.	விண்ணப்ப படிவம்	புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
7.	விண்ணப்ப கட்டணம்	The Block Development Officer, Puzhal Panchayat Union என்ற பெயரில் வங்கி வரைவோலை (DD) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். ST - Rs.50/-
8.	விண்ணப்பங்கள் பெறப்படும் காலம்	11.02.2026 முதல் 16.02.2026 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரையில் விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் வழி மூலமாகவோ புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அளிக்கலாம்.
9.	விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்	16.02.2026 அன்று மாலை 05.45 வரை
10.	விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டிய முகவரி	ஆணையாளர்/ புழல் ஊராட்சி ஒன்றியம் அஞ்சல் எண்-600066

நிபந்தனைகள்

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் நேரடியாக விண்ணப்பங்களை பெற்று அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து, கல்வித்தகுதி, சாதிச்சான்று உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களின் சுயசான்றொப்பிட்ட நகல்களை இணைத்து நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
2. நிர்ணயிக்கப்பட்டுள்ள இனவழுற்றி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களின் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலிக்கப்படும்.
3. தகுதியில்லா விண்ணப்பங்கள் மற்றும் காலக்கெடு முடிவுற்ற பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.
4. மேலே குறிப்பிட்டுள்ள இனவழுற்றி மற்றும் இ-ஆஃபீட்டின் படியே பணிநியமனம் மேற்கொள்ளப்படும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் தகுதி, திறன் தேர்வு குறித்த தகவல் அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

ஆணையர்,
புழல் ஊராட்சி ஒன்றியம்

செ.மு.எண் 126/செ.மு.தெ.ஆ/ஊரகவளர்ச்சி/2026,
நாள்-11.02.2026

அரிஹந்த்'ஸ் செக்யூரிடீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் 138, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை–600 004.
Tel : (044) 28444555, 43434000 Fax :(044) 43434030 CIN No.: L65993TN1994PLC027783

31.12.2025ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஒன்பது மாதங்கள்		முடிந்த ஆண்டு
		தணிக்கை செய்யாதது					தணிக்கையானது
		31.12.2025 முடிந்த காலாண்டு	30.09.2025 முடிந்த காலாண்டு	31.12.2024 முடிந்த காலாண்டு	31.12.2025 முடிந்த ஒன்பது மாதங்கள்	31.12.2024 முடிந்த ஒன்பது மாதங்கள்	31.03.2025 முடிந்த ஆண்டு
1	**செயல்பாடுகள் மூலம் வருமானம்**						
	a) செயல்பாடுகள் மூலம் வருமானம்						
	டிவிடெண்ட்	10.85	6.20	4.48	18.21	17.61	26.36
	வட்டி சலீதுகள்	1.68	-	0.23	1.68	0.23	0.25
	வருமான வரி கணக்கில் திருப்பி பெற்றது மீநான வட்டி	-	-	-	-	-	-
	இதர நிதி சலீதுகள்	-	-	-	-	-	-
	வைப்புத் தொகை வட்டி	-	-	-	-	-	-
	செயல்பாடுகளின் மொத்த வருமானம்	12.52	6.20	4.71	19.88	17.83	26.61
	இதர வருமானம்						
	இதர செயல்பாட்டு வருமானம்	14.25	46.82	58.43	90.31	208.01	199.58
	மொத்த வருமானம்	26.78	53.01	63.11	110.19	225.85	129.19
2	செலவுகள்						
	a. நிதி செலவுகள்	-	-	-	-	-	-
	b. ஊழியர் நல செலவுகள்	3.46	3.05	5.00	10.86	16.09	28.04
	c. தேய்மானம் மற்றும் உடன் திரத்தல் செலவுகள்	-	-	-	-	-	-
	d. வாரக கடன்கள்	-	-	-	-	-	-
	e. எண்பே ஒதுக்கீடு						
	f. நுன்கொடைகள்	-	-	-	-	1.21	1.21
	g. இதர செலவுகள்	8.98	8.13	6.48	29.37	24.83	33.76
	மொத்த செலவுகள்	12.44	11.19	11.48	40.23	42.12	63.01
3	வரிக்கு முன் லாபம்	14.33	41.82	51.63	69.97	183.73	66.19
4	வரி செலவுகள்						
	a) முந்தைய ஆண்டு வருமான வரி செலவுகள்	-	-	-	-	-	-
	b) தடப்பு ஆண்டு	3.58	10.46	-	17.49	-	17.37
	c) ஒத்திவைக்கப்பட்ட வரி	-	-	-	-	-	-
	மொத்த வரிச் செலவுகள்	3.58	10.46	-	17.49	-	17.37
5	வரிக்கு பின் லாபம்	10.75	31.37	51.63	52.48	183.73	48.82
6	இதர விரிவான வருமானம்:						
	(i) லாபம் அல்லது நஷ்டம் என மறுவகைப்படுத்தப்படாத பொருட்கள்: பங்குகளின் மதிப்பீட்டில் கிடைக்கும் லாபம்/(நஷ்டம்)	-	-	-	-	-	(212.55)
	(ii) லாபம் அல்லது நஷ்டம் என மறுவகைப்படுத்தப்படாத பொருட்களின் தொடர்பான வருமான வரி	-	-	-	-	-	-
	உப மொத்தம் (A)	-	-	-	-	-	(212.55)
	(i) லாபம் அல்லது நஷ்டம் என மறுவகைப்படுத்தப்படும் பொருட்கள்:	-	-	-	-	-	-
	(ii) லாபம் அல்லது நஷ்டம் என மறுவகைப்படுத்தப்படும் பொருட்களுடன் தொடர்புடைய வருமான வரி	-	-	-	-	-	-
	உப மொத்தம் (B)	-	-	-	-	-	-
	மொத்த மற்ற விரிவான வருமானம்	-	-	-	-	-	(212.55)
7	**காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்**	10.75	31.37	51.63	52.48	183.73	(163.73)
8	செலுத்தப்பட்ட மூலதனம்	500.00000	500.00000	500.00000	500.00000	500.00000	500.00000
9	இதர சமம்	-	-	-	-	-	-
10	ஒரு பங்கு சம்பாத்தியம்						
	a. அடிப்படை	0.02	0.06	0.10	0.10	0.37	(0.33)
	b. பலமிழந்தது	0.02	0.06	0.10	0.10	0.37	(0.33)

குறிப்பு:
1. மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் 10 பிப்ரவரி, 2026 அன்று நடந்த கம்பெனியின் குழு கூட்டத்தில் பரிசீலிக்கக் எடுக்கப்பட்டன.
2. ஒப்பீட்டுக்காக எடுக்கப்பட்ட தேவையோ அங்கு கடந்த காலாண்டு/ஆண்டு நிதிநிலை முடிவுகள் மறுவகை மற்றும் ஒழுங்கமைவுகள் செய்யப்பட்டன.
3. நுகர்பொருள் பொருட்டு வருடாந்திர ஆண்டு 2015–16க்கான வருமான வரி கோரிக்கை ரூ. 19,77,040/– மேல்முறையீட்டுத் தாக்கல் நிலுவையில் உள்ளது.
4. நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட Ind AS 109 நிதிக் கருவிகளைத் தவிர பொருத்தக்கூடிய இந்திய கணக்கியல் தரநிலைகளில் (Ind AS) வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் அளவீடு கொள்கைகளிடமே பேரேட்டு முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இடம் : சென்னை
தேதி : 10.02.2026

குழு சார்பாக
அரிஹந்த்
நிர்வாக இயக்குனர்

சுகல் & தமானி ஷேர் புரோக்கர்ஸ் லிமிடெட்

SUGAL & DAMANI

CIN: L65991TN1993PLC028228

சியாட் ஹவுஸ், 3வது மாடி, எண்.961, பூந்தமல்லி நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை 600 084

31 டிசம்பர், 2025–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த மற்றும் தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கையின் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	ஒருங்கிணைந்தது			தனியானது		
		31.12.2025	31.12.2025	31.12.2024	31.12.2025	31.12.2025	31.12.2024
		முடிந்த காலாண்டு	முடிந்த ஒன்பது மாதங்கள்	முடிந்த முந்தைய காலாண்டு	முடிந்த காலாண்டு	முடிந்த ஒன்பது மாதங்கள்	முடிந்த முந்தைய காலாண்டு
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	243.86	1,499.42	623.59	243.86	1,499.42	623.59
2	காலத்திற்கான நிகர லாபம் (வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	21.37	462.59	78.38	21.37	462.59	78.38
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	21.37	462.59	78.38	21.37	462.59	78.38
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	16.37	351.59	60.80	16.37	351.59	60.80
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது	26.80	373.63	37.95	26.80	373.63	37.95
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/–)	625.00	625.00	625.00	625.00	625.00	625.00
7	இதர சமம் (31 மார்ச் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை அறிக்கையில் உள்ளபடி)	-	-	-	-	-	-
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (தொடரும் மற்றும் தொடரும் செயல்பாடுகள் (வருடந்திரம் அல்ல) (ரூ.)						
	a) அடிப்படை	0.26	5.63	0.97	0.26	5.63	0.97
	b) பலமிழந்தது	0.26	5.63	0.97	0.26	5.63	0.97

குறிப்பு: SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிமீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மற்றும் தனியான காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. ஒருங்கிணைந்த மற்றும் தனியான காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.sugalandshare.com-ல் உள்ளது.

இடம் : சென்னை
தேதி : 10 பிப்ரவரி, 2026

இயக்குனர்கள் குழு சார்பாக
சுகல் & தமானி ஷேர் புரோக்கர்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
மகேஷ் சந்தக்
முழுநேர இயக்குனர்
DIN: 00052249

KARPAGA VINAYAGA
MEDICINE DENTISTRY ENGINEERING NURSING PHARMACY SCHOOL
EDUCATIONAL GROUP | CHENNAI

கற்பக விநாயகா மருத்துவமனை

சின்னகொளப்பாக்கம் – 603308
தொ.எண்: 044-71565100

பொது அறிவிப்பு

கற்பக விநாயகா மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவ பதிவேடு துறை, 31 டிசம்பர் 2021 வரையிலான சட்டசம்பந்தமான, இறப்பு சம்பந்தமான பதிவேடுகள் தவிர்த்து, மற்ற அனைத்து பதிவேடுகளும் அப்புறப்படுத்த திட்டமிட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கிறோம். எந்தவொரு நோயாளிகளுக்கும் ஏதேனும் சிகிச்சை நடைமுறைகள் தேவைப்பட்டால் இன்று முதல் 45 நாட்களுக்குள் மேலே குறிப்பிட்டுள்ள மருத்துவமனை தொலைபேசி எண் மற்றும் மின் அஞ்சல் mrd@kims.edu.in தொடர்பு கொள்ளவும்.

மருத்துவ பதிவேடு துறை